# நன்னெறி காட்டும் பண்பாடு

34

**ந.அய்யனார்,**
**முழுநேர முனைவர் பட்ட ஆய்வாளர்,**
**ஸ்ரீமத் சிவஞான பாலய சுவாமிகள்,**
**தமிழ், கலை & அறிவியல், கல்லூரி , மயிலம் – 604304**
**Mail:nayyanar2015@gmail.com**

**ஆய்வுச் சுருக்கம்**

சங்க காலம் முதல் இக்காலம் வரை தமிழ் மொழியில் எண்ணற்ற இலக்கியங்கள் தோன்றி வருகின்றன. அந்த வகையில் கி.பி.பதினேழாம் நூற்றாண்டில் வாழ்ந்த சிற்றிலக்கிய மூவருள் ஒருவராகத் திகழ்கின்ற சிவப்பிரகாசர் தாம் வாழ்ந்த குறுகிய காலத்தில் எண்ணற்றப் பல நூல்களில் இயற்றியுள்ளார். அவ்வாறு சுவாமிகளால் படைக்கப்பெற்ற நூல்களில் பக்தி சார்ந்தும், அக வாழ்க்கை சார்ந்தும் காணப்படுகின்றன. அந்த வகையில் அவர் இயற்றிய நூல்களுள் நீதி நூலாகத் திகழ்ந்து வருகின்ற நன்னெறியில் காணப்படக்கூடிய பண்பாடு பற்றியச் செய்திகளைப் பற்றி ஆராய்கின்ற விதமாக இவ்வாய்வுச் சுருக்கமானது அமைகின்றது.

**கருச்சொற்கள்**

நன்னெறி, சிவப்பிரகாசர், பண்பாடு, திருக்குறள், நட்பு,

**முன்னுரை**

தமிழ் இலக்கிய வரலாற்றில் காலந்தோறும் இலக்கியங்கள் மனிதனை நல்வழிப்படுத்துவதோடு மனதைச் செம்மையடையச் செய்தும் வருகின்றன. பசிப்பிணி அகற்றி ஆன்மிக சமுதாய தொண்டுகளை செய்து தமிழையும் வீரசைவத்தையும் இருகண்களாகக் கொண்டு வாழ்ந்தவர். கி.பி. 17ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த சிவப்பிரகாச சுவாமிகள் ஆவார். இவர் தாம் இயற்றிய 34 இலக்கியங்களில் மானிட நலன், மனிதப் பண்பு, நாகரிக மனிதனின் நடவடிக்கை முதலிய பண்பாட்டுக் கூறுகள் பதிவு செய்யப்பட்டுள்ளன. மனிதனின் அகவளர்ச்சி என்னும் பண்பாட்டையும் புறவளர்ச்சி என்னும் நாகரிகத்தையும் அவரால் படைக்கப்பெற்ற நூல்களில் நீதி நூலாகப் போற்றப்படுகின்ற நன்னெறியில் உள்ள நாற்பது பாடல்களும் படம் பிடித்துக் காட்டுகின்றன. அத்தகு சிறப்பினைப் பெற்ற நன்னெறியில் காணப்படக்கூடிய வாழ்வியல் செய்திகளைப் பற்றி அறிகின்ற விதமாக இக்கட்டுரையானது அமைகின்றது.

**நாகரீகமும் பண்பாடும்**

மனிதனின் அகவளர்ச்சியே பண்பாடு. உலகில் தோன்றிய ஒவ்வொரு இனத்திற்கும் ஒவ்வொரு விதமான பண்பாடு நிலவி வருகின்றது.

பண் ஒழுங்குபடுத்தப்பட்ட இசை

பண்ணை - ஒழுங்குபடுத்தப்பட்ட நிலம்

பண்பாடு -ஒழுங்குபடுத்தப்பட்ட சமுதாய நெறி

ஒழுங்குபடுத்தப்பட்ட சமுதாயமே பண்பட்ட சமூகமாகும்.

பண்பாடு என்பது பண்பாடு எனப் பிரியும். பொருட்களின் குணம் ஆகும் என்று தமிழ்மொழி அகராதி கூறுகிறது.

பாடு என்பது பேசுதல், சொல்லுதல் ஆகும்

பண்படுதல் என்பது சீர்திருத்துதல் எனப்படும்.

நம்நாட்டில் பழங்காலந்தொட்டே இப்பண்பாடு மக்களின் வாழ்விலும் இலக்கியங்களிலும் பேசப்படுகின்றது.

**பண்பெனப்படுவது பாடறிந்து ஒழுகுதல்** (கலித்தொகை பா.133) என்று கலித்தொகை சுட்டிச்செல்கின்றது

**மனிதனின் புறவளர்ச்சியே நாகரீகம்**

ஒரு மனிதன் அன்பு, ஈகை, வாய்மை, இரக்கம் முதலிய அகப்பண்புகளைப் பெற்றிருந்தாலும் அவற்றை வெளிபடுத்துவதன் மூலமே அவனை அறிந்து கொள்ள முடியும். அத்தகைய மனிதன் தனது தேவைகளை அறிந்து தனக்குத்தானே அறிவியல் கருவிகள், உணவு, உடை, உறைவிடம் ஆகியவற்றை ஏற்படுத்திக் கொண்டான். இது மனிதனின் புறவளர்ச்சியைச் சுட்டுகின்றது.

அகம், புறம் எனும் இவ்விரண்டும் வகை வளர்ச்சிகளும் இணைந்து அமைந்த சமுதாயமே முழுவளர்ச்சி பெற்ற நாகரீக சமுதாயமாக மாறுகின்றது. அதாவது, நாகரிகம் என்பதற்கு நகர் ஸ்ரீ அகம் நகரகம் நாகரிகம் என்றாயிற்று என விளக்குகிறார் அறிஞர் பாவாணர்.

எனவே, நாகரீகம் என்பது பகைவர் மனமும் புண்பட்டு வருந்தலாகாத கண்ணோட்டத்தோடு வாழ வேண்டும். இதனை,

**பெயக்கண்டும் நஞ்சுண்டமைவர் நயத்தக்க**
**நாகரிகம் வேண்டு பவர்**[1]

என்றுரைக்கிறார் திருவள்ளுவர்.

நற்றிணை செய்யுள் ஒன்று முந்தையிருந்து நட்டோர் கொடுப்பின் நஞ்சும் உண்பர் நனி நாகரிகர் என்றே அறம் பாடுகின்றது.

**சிவப்பிரகாசர் காட்டும் நாகரீகம்:**

**பிறருக்கு உதவுதல்**

எதையும் எதிர்பார்க்காமல் பிறருக்கு உதவுதல் நாகரீகம். இதனை

**என்று முகமன் இயம்பா தவர்கண்ணுஞ்**
**சென்று பொருள்கொடுப்பர் தீதற்றோர் - துன்றுசுவை**
**பூவிற் பொலிகுழலாய்! பூங்கை புகழவோ**

**நாவிற் குதவும் நயந்து.**[2] (நன்.பா-1)

என்ற பாடல் காட்டுகின்றது.

அழகிய கையானது தன்னைப் புகழ்ந்து பேசுவதற்காக சுவைமிக்க உணவினை நாவிற்கு வழங்குவது இல்லை. அதுபோல தீய குணம் இல்லாத சான்றோர்கள் எப்போதும் தனக்கு நல்ல வார்த்தைகளைக் கூறாதவர்களிடத்தும் தாமாகச் சென்று வேண்டியவற்றைக் கொடுத்து உதவுவார்கள் என்று நாகரிகத்தைப் பதிவு செய்கிறார்.

**வறுமை காலத்திலும் உதவுதல்:**

கொடுக்கும் குணமுடையோர் அப்பண்பில் இருந்து மாறமாட்டார்கள். எப்படி பயன்கொடுத்து அழிந்த வாழைமரத்தின் அடியில் வளரும் கன்றும் கனியினைக் கொடுப்பதைப்போல என்பதை,

**எந்தைநல் கூர்ந்தான் இரப்பார்க்கீந் தென்றவன்**
**மைந்தர்தம் ஈகை மறுப்பரோ - பைந்தொடீ!**
**நின்று பயனுதவி நில்லா அரம்பையின் கீழ்க்**
**கன்று முதவுங் கனி.**[3] (நன்.பா.17)

நின்று பயனுதவி நில்லா அரம்பையின் கீழ் கன்று உதவுங்கனி கொடுக்கும் என்பதையே நினைவூட்டுகின்றார் சுவாமிகள்.

**வேண்டிய காலத்தில் உதவுதல்:**

உயிரைக் கவர்ந்து செல்லும் கொடுமையான எமன்கூட கொல்வதற்கு முன்னால் மனம் உவந்து உதவுவதாகிய பண்பை மேற்கொண்டு வாழ வேண்டும் என்பதனை

**கொள்ளுங் கொடுங்கூற்றங் கொல்வான் குறுகுதன்முன்**
**உள்ளங் கனிந்தறஞ் செய்துய்கவே - வெள்ளம்**
**வருவதற்கு முன்னர் அணைகோலி வையார்**
**பெருகுதற்கண் என்செய்வார் பேசு**[4] (நன்.பா-30)

என்று அணையைக் கட்டிவைக்காதவர் வெள்ளம் பெருக்கெடுத்து வரும்போது அழிவையே சந்திக்க நேரும். ஆதலால் புவியில் வாழும் நாட்களில் நல்ல அறங்களைச் செய்வதையே நோக்கமாகக் கொள்ளல் வேண்டும்.

**பண்பாடு:**

சான்றோர்கள் தாம்பெற்ற இன்பத்தினைப் பிறரோடு பகிர்ந்துகொள்வர். இந்திரருடைய அமிழ்தே கிடைத்தாலும் கூட இனிது என தனியே உண்ணார். இப்படிப்பட்டவர்கள் இருப்பதனாலேயே உலகம் இன்றளவும் நிலைத்திருக்கிறது. (புறநானூறு-182)

**பண்புடையார் பட்டுண்டு உலகம் அஃதின்றேல்**
**மண்புக்கு மாய்வது மண்**[5]

என்கிறார் திருவள்ளுவர்.

நன்னெறியில் பல்வேறு களங்களை அமைத்து அதன்வழியே பண்பாட்டினை விதைத்திருக்கின்றார். அன்பு, அருள், வாய்மை, தூய்மை, ஒப்புரவு, கண்ணோட்டம், ஈகை என்ற பல்வேறு பண்பாட்டுக் கூறுகளை உணர்த்துகின்றார் சிவப்பிரகாசர்.

**கைமாறு கருதாத உதவி:**

முளைத்து வருகின்ற பற்கள் பலனை எதிர்பாராமல் வலிமையான உணவுகளை மென்று அதன் சாரமான சுவைகளை நாக்கிற்கும் கொடுக்கும். அதுபோல கல்வி அறிவில் முதிர்ச்சி உடையவர்கள் செய்கின்ற செயலுக்கு பலனை எதிர்பார்க்காமல் பிறருக்கு தன்னால் எவ்வளவு உதவ இயலுமோ அவ்வுதவியை உடலை வருத்திக் கொண்டாவது செய்து முடிப்பர் என்பதை,

**கைம்மா றுகவாமற் கற்றறிருந்தோர் மெய்வருந்தித்**
**தம்மால் இயலுதவி தான்செய்வர் - அம்மா**
**முளைக்கும் எயிறு முதிர்சுவைநா விற்கு**
**விளைக்கும் வலியனதாம் மென்று**[6] (நன்.பா.27)

சான்றோர் பலன் கருதாமல் உதவுவார் என்பதனை இப்பாடல் தெளிவு படுத்துகிறது.

**ஐம்புலன்களால் வருத்தம் கொள்ளாதவர்கள்**

ஆசைகளை அடக்கி நல்வழியிலும் தவ வழியிலும் நின்றவர்களை ஐம்புலன் இன்பங்கள் ஒன்றும் செய்வதில்லை என்னும் கருத்தை,

**பொய்ப்புலன்க ளைந்துநோய் புல்லியர்பா லன்றியே**
**மெய்ப்புலவர் தம்பால் விளையாவாம் - துப்பிற்**
**கழன்றுங்கொல் கற்றூணைச் சூறா வளிபோய்ச்**
**சுழற்றுஞ் சிறுபுன் றுரும்பு.**[7] (நன்.பா.11)

எனும் பாடல் உணர்த்துகிறது.

சுழன்று வீசும் கடும்சூறாவளிக்காற்று குறைவான பொருள்களையும் வலிமையற்ற தூசுகளையும் கவர்ந்து கொண்டு சுழலும். அது தன்னுடைய வலிமையினால் கல்லால் ஆன தூணைச் சுழற்ற இயலாது. அதுபோல மாயையில் உழலும் மெய், வாய், கண், மூக்கு, செவி என்னும் புலன்கள் ஐந்தும் குறைந்த அறிவுடையவர்களை மட்டுமே துன்புறுத்தும் தன்மையன. அவை சான்றோர்களிடம் சென்று துன்பங்களை விளைவிக்கும் தன்மையற்றனவாகும்.

**யாதனின் யாதனின் நீங்கியான் நோதல்**
**அதனின் அதனின் இலன்**[8] (குறள்.341)

என்பார் வள்ளுவர். எந்தந்த பொருள்களில் இருந்து நாம் நீங்கி வாழ்கின்றோமோ அந்தந்த பொருள்கள் வழியாக துன்பம் வருவதில்லை என்னும் வள்ளுவர் கருத்து ஒப்புடையதாகும்.

**பிறப்பால் உயர்வு தாழ்வு இல்லை**

பிறப்பினால் உயர்வு தாழ்வு கருதாமல் அறிவால் அறிய வேண்டும் என்பதனை புறநானூறு,

**ஒரு குடிப் பிறந்த பல்லோ ருள்ளும்**
**மூத்தோன் வருக என்னாது அவருள்**
**அறிவுடை யோன் ஆறு அரசும் செல்லும்[9]** (புறம். 183)

எனச் சுட்டுகிறது. இக்கருத்தினையே நன்னெறி,

**ஆக்கும் அறிவா னலது பிறப்பினான்**
**மீக்கோல் உயர்விழிவு வேண்டற்க - நீக்கு**
**பவரார் அரவின் பருமணிகண் டென்றுங்**
**கவரார் கடலின் கடு[10]** (நன்.பா.22)

என்ற பாடலில் குறிப்பிடுகிறது.

பாம்பிடம் விளைந்த பருத்த ஒளியுடைய மாணிக்கக் கல்லைக் கண்டு விலகிச் செல்பவர்கள் யார்? பரந்த கடலை உருவாகிய விடத்தை தன்க்கென எடுத்துக்கொள்பவர்கள் இல்லை. அதனால் உயர்வையும் தாழ்வையும் அவர்கள் கொண்டிருக்கும் அறிவினால் மதிப்பிட வேண்டுமே அல்லாமல் பிறப்பால் சாதியால் அறிய முற்படுவது தவறான செயல் என்பதை அறிவுறுத்துகின்றார்.

**நல்லோர் குணம்**

சிவப்பிரகாசர் நல்லோர் குணம் பற்றிக் குறிப்பிடுகின்ற போது,
சான்றோர்கள் நல்லோர் நட்பால் இன்பம் அடைவார்கள் தீயோர் நட்பால் துன்பம் அடைவார்கள் எனச் சுட்டிக் காட்டியுள்ளார். இதனை,

**நல்லோர் வரவால் நகைமுகங்கொண் டின்புறீஇ**
**அல்லோர் வரவான் அழுங்குவார் - வல்லோர்**
**திருந்துந் தளிர்காட்டித் தென்றல்வரத் தேமா**
**வருந்துஞ் சூழற்கால் வர. [11]** (நன்.பா.19)

எனும் பாடல் உணர்த்துகிறது.

மாமரம் தென்றல் காற்று வருவதற்காகத் தளிர்களோடு மகிழ்ந்து காத்திருக்கும். ஆனால், கடுமையான சூறாவளி காற்றுக்கு வருத்தம் கொள்ளும் சான்றோர்கள் நற்குணம் உடையவர்களின் வருகையால் மனமும் முகமும் மலர அன்பு கொண்டு மகிழ்ச்சி அடைந்து வரவேற்பார்கள். தீய குணம் கொண்டவர்களின் வருகையினால் துன்பம் அடைவார்கள் என்பதை அவர்தம் பாடல்களில் பதிவு செய்துள்ளதை அறியமுடிகின்றது.

**முடிவுரை:**

- அருளாளர்கள் இறை உணர்வைப் பெறும் அனுபவங்களை மட்டும் விளக்கிச் சொல்வதில்லை என்பதை இக்கட்டுரையின் வழி அறிந்து கொள்ள முடிகின்றது.
- நல்வாழ்வியல் கூறுகளையும் அறக் கருத்துகளையும் மக்களுக்கு உரிய வகையில் சொல்லிச் செல்வர் என்பது புலப்படுத்தப்படுகின்றது.

- அந்தவகையில் சிவப்பிராகாச சுவாமிகள் சமயக் கருத்துகளோடு உலகியல் வாழ்வு சிறக்க உதவும் அறக்கருத்துக்களையும் தம்முடைய படைப்புகளில் பதிவு செய்து உள்ளார். நன்னெறி மூலம் மனிதனுக்கு நாகரீகத்தையும் பண்பாட்டையும் கற்றுக் கொடுக்கிறார் சிவப்பிரகாசர் என்பதை இக்கட்டுரையின் வழி அறிந்துகொள்ள முடிகிறது.
- மனிதனுடைய அகவாழ்க்கையிலும் புறவாழ்க்கையிலும் வாழ்வியலைப் பண்படுத்துவதற்கு சிவப்பிரகாசரால் இயற்றப்பட்ட நன்னெறி என்ற நீதி நூலானது பெருந்துணை செய்துள்ளது என்பதைக் இக்கட்டுரையின் வழி அறிந்துகொள்ள முடிகிறது.

**அடிக்குறிப்புகள்**

1. குறள்.580
2. நன்னெறி.பா.1
3. மேலது,பா.17
4. மேலது,பா.30
5. குறள்.996
6. நன்னெறி.பா.27
7. மேலது.பா.11
8. குறள்.341
9. புறநானூறு.பா.183
10. நன்னெறி.பா.22
11. மேலது.பா.19

**துணைநூற்பட்டியல்**

1. **சிவப்பிரகாசர்** **நன்னெறி மூலமும் உரையும்,**
மயிலம் பொம்மபுர ஆதீனம் வெளியிடு,
மயிலம் – 1944
2. **இளங்குமரனார்.இரா(உ.ஆ)** **திருக்குறள்,**
பாவாணர் அறக்கட்டளை,
சென்னை – 2005
3. **செயபால்.இரா (உ.ஆ)** **அகநானூறு மூலமும் உரையும்**
நியூ செஞ்சுரி புக்ஹவுஸ் லிமிடெட்,
சென்னை – 2004

4. **செயபால்.இரா (உ.ஆ)** **புறநானூறு மூலமும் உரையும்**
நியூ செஞ்சுரி புக்ஹவுஸ் லிமிடெட்,
சென்னை – 2004

5. **செயபால்.இரா (உ.ஆ)** **நற்றிணை மூலமும் உரையும்**
நியூ செஞ்சுரி புக்ஹவுஸ் லிமிடெட்,
சென்னை – 2004